★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆவணி 14 ஜுல்கஃ 20 இதழ் 198

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30-8-83

பலாலி இராணுவ முகாம்

## லெப்டினன்ட் விபத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த லெப்டினன்ட் எச். கே. கருணரத்ன (45-வயது) என்பவர் டிரக் வண்டியொன்று மோதியதால் விபத்துக்குள்ளாகி மரணமானார்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இவ்விபத்து நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி இராணுவ முகாமில் இந்த விபத்து நிகழ்ந்தது. லெப்டினன்ட் கருணரத்ன உடனடியாக ஹெலிகொப்டர் மூலம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார். ஆயினும் சில நிமிடங்களில் அவர் இறந்துவிட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

மரண விசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் இந்த லெப்டினன்டின் சடலம் வைக்கப்பட்டுள்ளது. (மா)

## அமிர் — சிறிமா சந்திப்பு!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடினார்.

இச் சந்திப்பு சுமார் இரண்டு மணிநேரம் இடம் பெற்றது. வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம், அத்தனகல பாராளுமன்ற உறுப்பினர் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி, ஸ்ரீ. ல. சு. க. பிரமுகர் திரு. எம். சண்முகலிங்கம் ஆகியோரும் இச்சந்திப்பின் போது உடனிருந்தனர். இவர்கள் நடத்திய பேச்சுக்களின் விபரங்கள் வெளியிடப்படவில்லை. (க)

# ஜனதிபதி-பார்த்தசாரதி 2வது சந்திப்பு:
# நேற்று மாலை திடீரென நடந்தது!

(கொழும்பு)

**ஜனதிபதிக்கும் திரு. ஜி. பார்த்தசாரதிக்குமிடையே நேற்றுமாலை திடீரென ஒரு சந்திப்பு நிகழ்ந்தது.**

**நேற்று மாலை ஐந்து மணியளவில் நடைபெற்ற இச்சந்திப்பு எதிர்பாராதது என்று இச்செய்தி அச்சுக்குப் போகும் போது கிடைக்கப் பெற்ற தகவல்கள் தெரிவித்தன.**

(முன்வந்த செய்தி)

**இன்று நடக்கும் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் இலங்கைத் தமிழர்களின் விஷயங்கள் குறித்த முக்கிய பிரச்னைகள் ஆராயப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.**

கடந்த வியாழக்கிழமை இங்கு வந்த திரு. பார்த்தசாரதி ஜனதிபதியுடன் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையை வெள்ளிக்கிழமை நடாத்தினர், இதனை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்துடன் அடுத்து அடுத்து இரு தடவைகள் பேசினர். பின்னர் அமைச்சரவையிலுள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் பலருடனும் பேசினர். வெளிவிவகார அமைச்சர் ஜனப் ஏ. ஸி.எஸ். ஹமீட், கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில்மத்யூ, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸநாயக்கா, பிரதம மந்திரி ஆர். பிரேமதாசா, வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்துதலி ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமானுடனும் பேச்சுவார்த்தை நடாத்தினர். இவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர் திரு. அமிர்தலிங்கத்துடனும் பேச்சுவார்த்தையைத் திரு. பார்த்தசாரதி நடாத்தினர்.

இன்று திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் நடாத்தப்படவுள்ளபேச்சுவார்த்தையில் மிக முக்கியம்வாய்ந்த விஷயங்கள் இடம்பெறவுள்ளன. முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையில், உதவிகள் குறித்த விஷயங்கள் ஆராயப்பட்டன.

திரு. அமிர்தலிங்கத்துடம் பேசிய விஷயங்கள் சம்பந்தமாக ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் திரு. பார்த்தசாரதி இன்று பேசவுள்ளார்.

மிகவும் சிறந்த ராஜதந்திரியான திரு. பார்த்தசாரதி விஷயங்களைக் கையாள்வதில் மிகவும் திறமைசாலியென்று பேர் பெற்றவர். இதனல், அவர் திருமதி இந்திரா காந்தியின் மதிப்பைப்பெற்று, இந்திய வெளிவிவகார விஷயங்களில் ஆலோசனை சொல்வதற்காக விசேஷ ஆலோசகராக இருந்து வருகிறர்.

பேச்சு வார்த்தையில் சிறு தடங்கல் ஏற்பட்டாலும், அது குழம்பி விடாத விதத்தில் மிகப் பக்குவமாக தனது பங்கைச் செய்யக் கூடியவரென்பதை நம்பியதாலேயே இந்திரா அவரை தனது சொந்தப் பிரதிநிதியாக இங்கு அனுப்பிவைத்தார்.

## "தீவிரவாதிகளின் செயலே அண்மைய வன்செயல்கள்!" —பிரதமர்

(கொழும்பு)

"அண்மையில் நடந்த அசம்பாவிதங்கள் சில தீவிரவாத சக்திகளின் செயலாகும். இவர்களை மக்கள் இலகுவில் இனம் காணுவார்கள்" என்று பிரதமர் ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஹக்மனையில் நடந்த மாதிரிக் கிராமத் திறப்பு விழாவில் பேசுகையில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

"தாராள பொருளாதாரக் கொள்கையின் விளைவாக நாடு கண்டுவரும் அபிவிருத்தியைக் காணச் சகிக்காத சில தீவிரவாத சக்திகள் பொருமை கொண்டு. நாட்டின் அபிவிருத்தியை அழிக்கவேண்டுமென்ற நோக்கில் அண்மையில் நிகழ்ந்த வன்செயல்களை ஆரம்பித்தன. இவர்களைப் பொதுமக்கள் விரைவில் இனம் கண்டு கொள்ளவேண்டுமென்றும்" பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார். (சூ)

## அகதிகள் வடக்கு நோக்கி வருகிறர்கள்

(வவனியா)

கொழும்பிலிருந்து இன்னமும் அகதிகள் வடபகுதிக்கு வந்து சொண்டிருக்கிறர்கள்.

தென்னிலங்கையிலிருந்து அண்மையில் நடந்த கலவரத்திஞல் பாதிக்கப்பட்ட பல தமிழர்கள் இன்னமும் வடபகுதிக்கு திரும்பிய வண்ணம் உள்ளனர்.

கொழும்பு, கண்டி போன்ற பகுதிகளிலிருந்து தனியார் வாகனங்கள் மூலம் வவனியா வரை வாடகைக்கு அமர்த்தி இங்கு வந்து பின் இங்கிருந்து யாழ். குடாநாட்டுக்கு செல்கின்றனர்.

பலர் தமக்கும் இனிமேல் தென்னிலங்கைக்கும் தொடர்பில்லாதவகையில் உடைமை யாவற்றையும் இழந்துவிட்டு திரும்பியுள்ளனர் என்று கூறப்படுகிறது. (க)

## விஸ்வமடுவில் பஸ் தீக்கிரை

[கிளிநொச்சி]

பரந்தன் - முல்லைத்தீவு வீதி விஸ்வமடுவில் நேற்றுஅதிகாலை கிளிநொச்சி டிப்போவிற்குச் சொந்தமான புதிய பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

## செய்தித் தணிக்கை

கடந்த மாதம் 20-ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

தமிழக மீனவர்களைப் பாதுகாக்க

## இந்திய கடற்படை உஷார் நிலையில்!

(சென்னை)

இராமேஸ்வரம் கடற்பிராந்தியத்தில் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுவது குறித்து இந்திய அரசாங்கம் புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவரிடம் கவலை தெரிவித்திருப்பதோடு இராமேஸ்வரப் பிராந்தியத்தில் மீனவர்களைப் பாதுகாக்கத் தமது கடற்படைகளை உஷார்நிலையில் நிறுத்தவுள்ளது.

இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மத்திய அரசுக்கு தெரிவித்த புகாருக்குப் பதிலளிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு அனுப்பிவைத்துள்ள அவசரத் தந்தியில் மேற்கண்ட விபரத்தைத் தெரிவித்துள்ளார்.

இப்பிராந்தியத்தில் நிறுத்தப்படவிருக்கும் இந்திய கடற்படை, இந்திய மீனவர்களை அயலார் தாக்குவதிலிருந்து பாதுகாக்கும் என்றும் அத்தந்தியில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (சூ)

## தாயிடமிருந்து பறித்துச் சென்ற குழந்தை லொறிக்குப் பலியானது!

### படுகாயங்களுடன் தந்தை ஆஸ்பத்திரியில்!!

(யாழ்ப்பாணம்)

தாயிடமிருந்து தமது ஒன்றரை வயதுக் குழந்தையைப் பறித்துச் சென்ற தந்தை இடைவழியில் குழந்தையை லொறிக்குப் பலி கொடுத்தார். குழந்தையைப் பந்தாடிய லொறி மின்னல் வேகத்தில் ஓடிமறைந்ததாம்.

35 வயதான ராமுப்பிள்ளை பொன்னம்பலம் இணுவில் கந்தசுவாமி கோயில் சந்தியில் சைக்கிள் கடை நடத்துபவர். குடும்பப்பிரச்னை காரணமாக இவரது மனைவி புஷ்பராணி தமது ஒன்றரை வயது மகன் சந்திரகுமாரையும் கொண்டு வீட்டை விட்டு புறப்பட்டார். கணவன் அவரைப் பின் தொடர்ந்து சென்று தாயிடமிருந்து குழந்தையைப் பறித்துக்கொண்டு வீடுநோக்கிச் சென்றார். இணுவில் கந்தசுவாமி கோவில் சந்தியில் பிரதான வீதியைக் கடக்கும் போது வேகமாக வந்த லொறியொன்று தந்தையையும் குழந்தையையும் மோதியது. தந்தை பொன்னம்பலம் படுகாயங்களுடன் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சுன்னுகம் பொலிஸ் நிலை

(5-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் ஆரம்பம்; மாணவர் வரவு குறைவு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் நேற்றுக்காலை ஆரம்பமானபோதும் வடபகுதியில் அதிகமான மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. சில பாடசாலைகளில் மாணவர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பஸ், மினிபஸ் போக்குவரத்துச் சேவை வழமை போல் நடைபெற்றது.

அரசாங்க கூட்டுத்தாபன, தனியார் ஸ்தாபனங்களில் வேலைகள் நடைபெற்றன. கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றது. சந்தைகள் கூடின. பொதுமக்கள் நடமாட்டம் அதிகரித்திருந்தது.

தியேட்டர்களிலும் சினிமாக் காட்சிகள் நடைபெற்றன. (மா

விக்ன டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்

கலை வர்த்தகத்துக்கு தனித்துவமானது

84 DAY CLASS- புதிய வகுப்பு [1-9-83] 8-30 A.M.

85 Sat. Sun. - புதிய வகுப்பு [3-9-83] 8-00 A. M.

மு. கு: A/L O/L } மற்றைய வகுப்புகளும் குறுகிய இடைவேளைக்குப் பின் நடைபெறுகின்றன.

8374

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில்உள்ள C. D. 200 Honda நீலநிறம், விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். A. மரியதாசன், போயிட்டி, இளவாலை.
8412

கோப்பாய் பழம் ரேட்டில் (இருபாலை) 7½பரப்பு காணி நற்சூழலில் கிணறு, தென்னை உட்பட விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்ளவும். சி. பாலரத்தினம் (உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை) இணுவில்வீதி, மானிப்பாய்.
8419

சாவகச்சேரியில் புகையிரத நிலையத்திற்கும் சிவன் கோவிலுக்கும் இடையில் 2½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: பொ. ஜெயராசா, சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி அல்லது ''பரம்ஸ்'' நவீனசந்தை, சாவகச்சேரி.
8404

யாழ்ப்பாணம் நல்லூர் செம்மணிவீதி 98ம் (38) இலக்கத்தில் கல்விக்கந்தோருக்கு முன்பாக வீடுகட்டுவதற்கு 3பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு மேற்கண்டவிலாசத்திற்கு நேரில் வரவும்.
(8370)

E N 9700 தொடர் இலக்க A 50. கார் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு. சிறிவள்ளி கபே, சாவகச்சேரி
8405

வவுனியா கந்தசாமி கோவில் வீதியும் பசார்வீதியும் சந்திக்குமிடத்தில் அமைந்திருக்கும் நான்கு கடைக்கட்டிடங்களும் (அதிலுள்ள தளபாடங்கள் இரும்புச் சாமான்களும்) அதற்கு முன்னால்அமைந்துள்ள இரண்டுகடைகளும், 'ஸ்ரோர்' கட்டிடமும் விற்பனைக்குண்டு. இத்துடன் வவுனியாவிலுள்ள வடபகுதியின் ஒரே ஒரு சருங்கல்லுடைக்கும் ஆலை காணி கட்டிடங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திரு. சொர்ணபாலா(சட்டத்தரணி) வவுனியா. தொலைபேசி இலக்கம்: 2339
(8414)

### நகரசபை, வவுனியா
## கூறு விலைகள்

காங்கேசன்துறை இலங்கை சீமேந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து வவுனியா நகரசபை வளவுக்கு 29½ அடி நீளமான 152 கொங்கிறீட் மின்சாரத் தூண்களை ஏற்றி இறக்கக் கூறுவிலைகள் 5-9-83ம் திகதி முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒரு தூண் ஏற்றுவதற்கான விலையைக் குறித்து கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சீமேந்துத்தூண் ஏற்றுவதற்கான கூறுவிலை'' எனக்குறித்து அனுப்பவேண்டும்.

ஐ. கேதீஸ்வரன்,
தலைவர்,
நகரசபை, வவுனியா.
25-8-83. 8416

### தவறிவிட்டது

யாழ். மாநகரில் ஒரு பாஸ்போட்டும் காப்புறுதிப்பத்திரம், கொம்பாஸ் பெட்டியுடன் பார்சல் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கருணை கூர்ந்து தொடர்பு கொள்ளவும். ''குகவாசா'' வதிரி கரவெட்டி.
8410

### தேவை

சமையல் வேலையாள் தேவை. வவுனியாவிலுள்ள ஜெர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தில் வேலைசெய்யும் ஜெர்மனிய முகவர் ஒருவருக்கு மேல் நாட்டு முறைகளில் உணவு தயாரிக்கக் கூடிய ஆங்கிலத்தில் கதைக்க வல்ல வேலையாள் (ஆண் அல்லது பெண்) தேவை. கீழ்க் கண்ட விலாசத்திற்கு உடன் விண்ணப்பிக்கவும்: ஜெர்மன் தொழில்நுட்ப நிறுவனம், குறுமண்காடு, வவுனியா. தொலைபேசி: 2175 (வவுனியா).
(8413)

### பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பளை
## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தில் வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. கேள்விப் படிவங்கள் ரூபா 100/- மீளப் பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை. வெற்றுச்சாக்குகளை சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள்யாவும் 6-9-83 க்கு முன் முத்திரையிடப்பட்ட பதிவுத்தபால் மூலம் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இங்ஙனம்,
பொதுமுகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி,
ப. நோ. கூ. சங்கம்,
பளை.
26-8-83. 8417

### அறிவித்தல்

கலவரங்களினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் அல்லது தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் எமது அங்கத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு வெள்ளிக்கிழமை (3-9-83)க்கு இடையில் தொடர்பு கொள்ளவும்.

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் (CESU),
இலங்கை பயிர்ச்செய்கை சேவையாளர் சங்கம் (CPSU)
எல் சாந்திகுமார்
(Legal Secretary)
21/2, Convent South
யாழ்ப்பாணம் (8420)

## WANTED

Applications are invited from suitable persons with experience for the following posts:-

1. AIRLINES MANAGER
2. AIR TICKETING OFFICERS
3. TECHNICIANS
4. DRIVER

Send your applications under registered cover to reach The Managing Director
CROSS TRAVEL SERVICES (PTE) LTD:
Stage II. 1st Floor, No: 5, Modern Market,
Bus Stand Centre Road, Jaffna.
On or before 1983-09-05.

## வவுனியாவில் மாலை 3 மணிவரை பஸ்சேவை!

(வவுனியா)

ஆறுமணியுடன் வவுனியா நகர் அடங்கி விடுகின்றது. கடந்த சில நாட்களாக நகர் மாலையானதும் அமைதி நிலவுகின்றது.

பஸ் சேவைகள் கூட 3 மணியுடன் நிறுத்தப்படுகின்றது. வர்த்தக ஸ்தாபனங்கள் நேரகாலத்துடன் மூடப்படுகின்றது.

மக்கள் தமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்காக காலை 10 மணிக்கு முன்னரே நகருக்கு வந்து வீடு திரும்பிவிடுகிறார்கள்.

வெளியிடங்களிலிருந்து குறித்த சில உணவுப் பொருள்கள் லொறிகள் மூலம் இங்கு வரவழைக்கப்படுகின்றன.

அதேநேரத்தில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது.

வெலிமடை உருளைக்கிழங்கு இங்கு சந்தைக்கு வந்துள்ளது.

தனியாருக்குச் சொந்தமான லொறிகள் உள்ளூர் விளை பொருள்களை ஏற்றிக்கொண்டு கொழும்புக்குச் சென்றுவருகின்றது.

வவுனியாவிலிருந்து பெருமளவு அரிசியும் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றது. (க)

## நெல்லியடி இருள்மயம்

[கரவெட்டி]

யாழ். மாவட்ட நெல்லியடி உப-அலுவலகத்தின் கீழுள்ள முக்கிய சந்திகளாகிய நெல்லியடி, வதிரிச் சந்திகளும் அவற்றின் சுற்றயல் பிரதேசங்களும் இருள்மயமாக உள்ளன. இப்பகுதியில் இணைக்கப்பட்டிருந்த ''இரசக்குமிழ்கள்'' பல உடைக்கப்பட்டும், கழற்றப்பட்டும் உள்ளதாலேயே இவ்விருள் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. [க]

## நோயாளிகள் கஷ்டம்

[கரவெட்டி]

வதிரியிலுள்ள தாய்மார் சிகிச்சை நிலையத்திற்குவரும் வைத்திய அதிகாரியின் ஒழுங்கீனத்தால் இங்கு சிகிச்சை பெறவருகின்ற தாய்மாரும், குழந்தைகளும் பாதிப்படைகின்றனர்.

இங்கு வைத்திய அதிகாரியின் வருகைக்காகப் பலமணி நேரம் காத்துநிற்பதால் கற்பிணித் தாய்மாரும், குழந்தைகளும் மூர்ச்சையுற்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. (க)

## பஸ் விபத்தில் பெண் பலி!

[பண்டத்தரிப்பு]

சங்கானைச் சந்தைக்குச் சமீபமாகக் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் நிகழ்ந்த மினிபஸ் விபத்தில் காரைநகரைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயார் ஒருவர் மரணமானார்.

காரைநகர் தங்கோடை என்ற இடத்தைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் [வயது-50] என்பவரே பலியானவராவர். இவரது மரணவிசாரணையைப் பண்டத்தரிப்புப் பகுதித் திடீர் மரணவிசாரணை அதிகாரி வைத்திய கலாநிதி அல்போன்ஸ் அத்தனாசியார் நடாத்தினார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் கதிரவேற்பிள்ளை பிரேதபரிசோதனையை நடத்தினார். பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரான மினிபஸ் சாரதியைப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி சாட்சிகளைத் தம்முன் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். (சூ)

## இருவாரத்தின்பின் எதிரி கைது!

[திருகோணமலை]

சல்லியைச் சேர்ந்த துரைசாமி விநாயகப்பெருமாள் என்பவரைக் கொலைசெய்தமை தொடர்பாக உப்புவெளி பொலிசாரால் ரட்ணம் பத்மராசா என்பவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இறந்தவரை எதிரி உலக்கையினால் அடித்து கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கொலைநடந்து இரண்டு வாரங்களுக்குப் பின்னர் தலைமறைவாகியிருந்த எதிரியை பொலிஸ் சார்ஜண்ட் கைலைநாதன் கைது செய்தார். மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# பஸ் தடம்புரண்டு 17 பொலிசார் காயம்!

(வவுனியா)

பொலிசார் பிரயாணம் செய்த பஸ் ஒன்று தடம்புரண்டதை அடுத்து 17 பேர் காயமடைந்துள்ளனர். 6 பேர் படுகாயமடைந்ததால் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். மற்றைய 11 பேரும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனியன்று கொழும்பில் பயிற்சியை முடிந்துக்கொண்டு வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதற்காக 46 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் அனுராதபுரம்வரை ரயில்மூலம்வந்து அங்கிருந்து இ. போ. ச. பஸ் ஒன்றில் புறப்பட்டதாகவும் பூநாவை என்ற இடத்தில் பஸ் தடம் புரண்டது என்றும் தெரிவிக்கப்பட்டது, (மா)

### கிளிநொச்சி அகதிகள் முகாம்களை
## கூட்டணி எம். பி.க்கள் பார்வையிட்டனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள அகதிகள் முகாம்களை தமிழர் விடுதலை கூட்டணி எம்.பி.க்கள் நேற்றுச் சென்று பார்வையிட்டனர்.

தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், கிளிநொச்சி எம். பி. திரு.வி. ஆனந்தசங்கரி, கோப்பாய் எம்.பி. திரு.எம்.ஆலாலசுந்தரம், யாழ். மாவட்ட சபைத் தலைவர் திரு. என். ராஜேந்திரன், மாவட்டசபை உறுப்பினர் திரு. இ.கிருஷ்ணராசா ஆகியோர் அகதிகள் முகாம்களைச் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

கிளிநொச்சி அகதிகளுக்கு நிரந்தர புனர்வாழ்வு அளிப்பது பற்றியும் கூட்டணி எம். பி.க்கள் ஆலோசித்தனர்.

வண.பிதா. பயஸ் அடிகளார், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், றெட்பாணா பிரதிநிதிகளும் இவ்வகதிகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்கிவருகிறார்கள். (ிவ)

## பண்ணை சிறுவர் இல்லத்தில் மற்றொரு அகதிகள் முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில், பண்ணை சிறுவர் இல்லத்தில் திறக்கப்பட்டுள் அகதிகள் முகாமில், 97 பேர் தங்கியுள்ளனர்.

இம்முகாமை, அகில உலக இந்து மகாசபை, இலங்கைக் கிளை பொறுப்பேற்றுள்ளது. திரிசாரண குழு தொண்டர்களும், ஸ்ரீ சுப்பிரமணிய கோட்ட இளைஞர் குழுவினரும் இம் முகாமில் தொண்டர்களாக பணியாற்றிவருகிறார்கள். இம் முகாமிற்கு மாத்தளை, கண்டி, கொழும்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து அகதிகள் வந்துள்ளனர். மேலும் 50 அகதிகள் இம் முகாமிற்குள்வருவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம் முகாமிற்கு தேவையான அரிசி, காய்கறி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது, (மா)

## மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம் அகதிகளுக்கு உதவி

(மானிப்பாய்)

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்திற்குரூபா 7000த்தையும், தலைவர் தனது ஒருமாத அலவன்சையும், நெறியாளர்கள் தமது ஒரு மாத அலவன்சையும் வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

பணியாளர்கள் தமது இரண்டு நாள்சம்பளத்தை கொடுத்தும் பொது மக்களிடமிருந்தும், நிதி சேகரித்து யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983க்கு வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம் தனது எல்லைப் பரப்பிலுள்ள பாவனையாளர்களுக்கு எவ்வித கட்டுப்பாடும் இன்றி மண்எண்ணை விநியோகித்துவருகிறது. மேலும் சங்க எல்லைப்பரப்பில் உள்ள விவசாயிகள், கடல் தொழிலாளர்கள் ஆகியோருக்கு 10 லீற்றர் வீதம் மண்எண்ணை விநியோகித்து திறம்பட சேவையாற்றிவருகிறது.

## அதிபர்கள் கூட்டம்

[கரவெட்டி]

இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவிருந்த கோப்பாய் கல்வி வட்டார அதிபர்கள் கூட்டம் இன்று நடைபெறும் என வட்டாரக்கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தெரிவித்துள்ளார்.

## அமைதியாகக் கொண்டாடப்பட்டது

(மாவிட்டபுரம்)

வசவிளான் பலாலிதெற்கு புனித யாகப்பர் கோவில் பெருநாள் அப்பங்கு மக்களால் இவ்வருடம் மிகவும் அமைதியாகக் கொண்டாடப்பட்டது.

# இடம்பெயர்ந்த ஆசிரியருக்கு

# தற்காலிக ஏற்பாடுகள்!

## மகாசிவம் தகவல்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தற்காலிகமாக தாம் விரும்பும் பாடசாலைககளில் பணியாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்று தமிழர் ஆசிரியர் சங்கப்பொதுச்செயலாளர் திரு. மகாசிவம் கூறியுள்ளார்.

இற்றைவரை நாட்டின் பலபாகங்களிலிருந்து 1400க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். இதேபோன்று ஏனைய தமிழ்ப்பகுதிகட்கும் பலர் சென்றுள்ளார்கள்.

வடமாகாணத்தில் உள்ள பாதிக்கப்பட்ட ஆரிசியர்களின் பிரச்னையை இ. த. ஆ. சங்கப் பொதுச்செயளாளர் த. மகாசிவமும் கிழக்கு மாகாணத்தில் உள்ள பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் பிரச்னைகளை இ. த. ஆ, சங்கத்தலைவர் டி எஸ்.கே. வணசிங்காவும் கவனித்துவருகின்றூர்கள். . இவர்கள் இருவருக்கும் உதவியாக அவ்வப் பகுதி மாவட்டச்செயலாளர்களும் தாய்ச்சங்க நிர்வாகிகளும் பணியாற்றிவருகின்றூர்கள்.

யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்களை அவர்கள் விரும்பும் பாடசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றுவதற்குஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளது. இவர்களது ஆகஸ்ட்மாத வேதனமும் இடர்க்காலக் கடனுக மூன்று மாதவேதனமும்வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் உள்ள தனியார் பாடசாலைகளில் கற்பித்த சுமார் நாற்பது ஆசிரியர்களும் இடம்பெயர்ந்து வந்துள்ளார்கள். இவர்களது வேதனத்தையும் யாழ். கல்வித் திணைக்களம் வழங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளும் வண்ணம் கல்வி அமைச்சு மேலதிக செயலாளர் திரு. எம். பி. சி. சில்வாவுடன் தொடர்புகொண்டது பயனுள்ளதாக அமைந்திருப்பதாக திரு. த. மகாசிவம் கூறியுள்ளார்.

தேசிய மயமாக்கப்படாத தோட்டப்பாடசாலை ஆசிரிர்கள் கூட்டுத்தாபனங்களின் ஊழியரதுதகுதிநிலையில் கணிக்கப்படுவதால் இவர்களது வேதனத்தையும் ஏனைய சலுகைகளையும் யாழ். அரசாங்க அதிபரே வழங்கத்தகுதியுடையவராவர். இவர்களுக்கு உடன் நிவாரணம் வழங்குவதற்கு வேண்டிய வழிகளைச் செய்யுமாறு அரசாங்க அதிபரையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் த. மகாசிவம் கோரியுள்ளார்.

வசதிகள் சேவைகள் கட்டண ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், நிரந்தர நியமனம் பெறுத சுவீகரிக்கப்பட்ட தோட்டப்பாசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு வேதனம் வழங்குவதில் திட்டவட்டமான முடிவை எடுக்க முடியாத போதிலும் இவர்களது சேவை தொடர்புகுன்ருது இருப்பதற்காக யாழ்ப்பாணப் பாடசாலைகளில் இவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுவதற்கு கல்வி அமைச்சு அதிகாரிகள் சம்மதித்துள்ளார்கள்.

அறுபது வயதிற்குமேல் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அவர்களது ஒப்பந்தம் மேலும் நீடிக்கப்பட்டிருந்தால் அவர்கட்கும், ஏனைய ஆசிரியர்கட்கு வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்படும் என்றும் திரு. த. மாகசிவம் கூறிஞர்.

பாதிக்கப்பட்ட ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்களையும் யாழ்ப்பாணத்தில் உள்ள கலாசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்ற அனுமதிக்கும்படியும் அதேபோன்று வெளிமாவட்ட ஆசிரிய கலாசாலை பயிற்சி ஆசிரியர்களை அவர்கட்கு உரிய பாடத்திற்கு அமைய இவ்விடம் உள்ள கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்கு அனுமதிக்கும் படியும் வெளியில் உள்ள யாழ்ப்பாண ஆசிரிய கலாசாலைப் பயிற்சி ஆசிரியர்களை அவ்வப் பகுதிகளில் உள்ள ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சிபெற அனுமதிக்கும்படியும் த. மகாசிவம் கல்வி அமைச்சைக் கோரியுள்ளார்.

## புதிய பஸ் சேவைகள்

(வவனியா)

பருத்தித்துறை இ. போ.ச. டிப்போ பருத்தித்துறையிலிருந்து வவனியாவுக்கு இரு பஸ் சேவைகளை மேற்கொண்டுள்ளது. தினமும் இரண்டு பஸ்கள் இச்சேவையில் ஈடுபடும்.

அதேவேளை வவனியா டிப்போ தனது நீண்ட பல சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ள அதேவேளை நெடுங்கேணி, முருங்கன், மாங்குளம் பகுதிகளுக்கான குறுகிய தூர பஸ் சேவைகளைத் தற்காலிகமாக நடத்தத்தொடங்கியுள்ளது.

அண்மைக்காலமாகக் காரைநகர் டிப்போவும் வவனியா வரை ஒரு சேவையைத் தினமும் நடத்திவருகின்றது. (அ)

## வவனியாவிலுள்ள அகதிகளுக்கு சர்வோதயம் ரூ. 25,000 உதவி

### இந்தியா செல்ல பலர்விருப்பம்

(வவனியா)

வவனியாவில் தங்கியுள்ள அகதிகளுக்கு சர்வோதயத் தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்ன, 25 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

வவனியா ஓமந்தை என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாமுக்குச் சென்று பார்வையிட்ட சர்வோதய தலைவர் அகதிகளின் உணவு மற்றும் அத்தியாவசியதேவைகளுக்குக் குறித்த தொகையினை வழங்கியுள்ளார்.

ஓமந்தை அகதிகள் முகாமில் 265 பேர் தங்கியுள்ளனர். கண்டி, மாத்தளை, நுவரேலியா பதுளை, மாத்தறை முதலான இடங்களில் பாதிக்கப்பட்ட பலர் இங்கு வந்துள்ளனர்.

### புளியங்குளத்தில்

புளியங்குளத்திலுள்ள பூபால கிருஷ்ண ஆச்சிரமத்தில் 50 சிறுவர்கள் தங்கியுள்ளனர். அத்துடன் மாத்தளையிலிருந்து வந்த 50 பேரும் இங்கு தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான உதவிகளைச் செஞ்சிலுவைச் சங்கம், பனம் பொருள் அபிவிருத்திச் சபை மற்றும் அப்பகுதித் தொண்டர்கள் வழ்ங்கிவருகின்றனர் என கச்சேரி உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### கனகராயனில் மலையக அகதிகள்

மலையகத்திலிருந்து தோட்டத்தொழிலாளிகள் அகதிகளாக நூற்றுக்கு மேற்பட்டோர் வவனியா கனகராயன் குளம் வந்துள்ளனர். கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் தற்போது இவர்கள் தங்கியுள்ளனர். கண்டி, அவிசாவளைமுதலானபகுதிகளிலிருந்து தமது உடைமைகளை இழந்து இங்கு வந்துள்ள தோட்டத் தொழிலாளர்களான இவர்களுக்குக் கனகராயன்குளம் பகுதிப்பொதுமக்களும், கிராம சேவை அலுவலர்களும் தேவையான உதவிகளை வழங்கிவருகின்றனர்.

### இந்தியாசெல்ல விருப்பம்

இதுஇவ்வாறிருக்க வன்னி வந்த மலையகப்பகுதி மக்கள் இந்தியா செல்லவே விரும்புகின்றனராம்.

கலவரங்களிஞல் பலதடவை பாதிப்புக்குள்ளான இவர்கள் இந்நாட்டில் வாழவிரும்பவில்லையென்றும், தமது தாயகமான இந்தியாவுக்குச் செல்ல முன்வந்துள்ளதாகவும் தம்மிடம் இவர்கள் கூறியதாக வவனியா மாவட்ட இ. தொ. க. தலைவர் திரு. கே. பாலசிங்கம் தெரிவித்தார்.

## இஸ்ரேலியபிரதமர்ராஜிஞமா

ரெல்அவிவ், ஆக., 29

இஸ்ரேலியப் பிரதமர் மெஞசிம் பெகின் தமது பதவியிலிருந்து விலக முடிவுசெய்துள்ளார் என்று இஸ்ரேலிய வாஞெலி அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் புதிய பொருளாதாரக் கொள்கையோ, அல்லது பெகின் கூட்டு அரசாங்கக் கட்சிகளின் விவகாரமோ அவரது ராஜிஞமாவுக்குக் காரணமல்லவென்றும், நோய்வாய்ப் பட்டதிஞலேயே அவர் ராஜிஞமாச் செய்ய முன்வந்துள்ளதாகவும் நம்பப்படுகிறது. ஆஞலும் அவர் எப்போது பதவி விலகுவார் என்பதுபற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

பாலஸ்தீன பிரச்னை குறித்த ஐ. நா. மகாநாடு தொடங்கியிருக்ஒம் இந்நேரத்தில் பெகினின் இந்த அறிவிப்பு மேற்காசியத் தலைவர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (சூ)

## மதுபோதையில் வந்த தந்தை தாயுடன் சண்டைபோட்டார்!

# பிடிக்காத மகன் தற்கொலை!

[மாவிட்டபுரம்]

மதுவெறியுடன் வந்த தந்தை தாயாருடன் சண்டை பிடித்தது மகனுக்குப் பிடிக்கவில்லை. 20 வயதுடைய அவ்விளைஞன் நஞ்சருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார்.

ஏழாலையில் இடம்பெற்றஇச் சம்பவத்தில் இறந்தவர் கதிரவேலு சற்குணசிங்கம் என்னும் 20 வயது இளைஞர் ஆவார்.

இவரது மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்திஞர்.

காலமானவரின் தந்தை அடிக்கடி மது அருந்தியபடி வீட்டுக்கு வருவாரெனவும், மதுவெறியில் மனைவியுடன் சண்டை பிடிப்பாரெனவும், இதுகாலமானவருக்குப் பிடிக்கவில்லையெனவும், தமது தந்தையை இப்படி நடக்கவேண்டாமென அவர் கண்டித்து வந்ததாகவும், சம்பவதினமும் தந்தை மதுவெறியில் வந்து தாயாருடன் சண்டைக்குச் செல்லவே மனமுடைந்த காலமானவர் நஞ்சருந்தி மரணமாஞரெனவும் விசாரணையில் தெரியவந்தது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி திருமதி யோகரட்ணம் பிரேத பரிசோதனை செய்து, நஞ்சருந்தியதால் மரணம் சம்பவித்ததாகக் கூறிஞர்.

மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கி காலமானவரின் தந்தைக்குக் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தார்.

மதுவெறி காரணமாகக் குடும்பத்தில் நிம்மதி குலைந்து மகனைக்கூட அநியாயமாக இழக்கும்நிலை ஏற்பட்டது குறித்துப் பெரிதும் வெட்கப்படவேண்டும். பொறுப்பற்ற நிலையில் நடக்காது தந்தை என்றஸ்தானத்தைக் காப்பாற்றும் வகையில் குடும்பத்திற்கு வழிகாட்டியாகவிளங்கவேண்டும்'' என்று அவர் தமது எச்சரிக்கையில் தெரிவித்தார்.

சுன்ஞகம் பொலிசார் மரண விசாரணைக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

## போலி இடமாற்றம்:

# இடைநிறுத்தப்பட்ட ஆசிரியர்கள் விபரம்

(கொழும்பு)

போலிக் கையெழுத்துடன் கூடிய இடமாற்றக் கடிதங்கள் மூலம் இடமாற்றம் பெற்றதாகக் கூறப்படும் 61 ஆசிரியர்கள் கடந்த ஆறு மாதங்களாக வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆறு மாதங்களாகத் தமக்கு எதுவித சம்பளமும் தரப்படாதனையிஞல் தமது அன்ருட வாழ்க்கையைக் கொண்டுநடத்துவதே தம்மால் முடியாதிருப்பதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிலர் கூறினர்.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட ஆசிரியர்கள் கல்வி அமைச்சுக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

இது குறித்து அண்மையில் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டபோது இவ்விடயம் சம்பந்தமாக சி. ஐ.டியினரும் லஞ்ச திணைக்களமும்விசாரணை நடத்தி வருவதாக கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களின் விபரம் வருமாறு;

எம். எம். நீலாம் கா/மல்கறேஸ் கல்யா ம. வி., செல்வி என். எம். ஏ. மாளியா மொ/அல்பொலா முஸ்லீம் வித்தியாலயம், திருவாளர்கள் ஏ. எல். எம். ஏ. லத்தீன் கமு/அல் ஈர்வான் வித்தியாலயம், கே. எல். ஏ. கே. ரகுமான் பொ/கட்டுவானில் முஸ்லீம் வித்தியாலயம், எ. எம். பசீர் மா/வவுனிக்குளம் அரசாங்கத் தமிழ் வித்தியாலயம், பி.எம். எம். அஸ்ராத் பது/அல்ஈர்ஸான் ம. வி., ஏ. எல். எம். ஹஸன் இ/மந்தியார் முஸ்லீம் வித்தியாலயம், எஸ். சிவரத்தினம் பொ/முந்தல் தமிழ் வித்தியாலயம். எஸ். சுந்தரராசா, பது/வெலிமடை தமிழ் ம. வி., பி. எம். எம். அப்பார், கொ/அல் அமின் முஸ்லிம் வித்தியாலயம், பி.டி. கோரின், மொ/பகினிககாவெலை மு. ம. வி., யூ. எல். நூர் முகம்மது பொ/பள்ளியகொடல்லை மு. வி., எல். ரி. சுந்தரரேஸ்வரன், பொ/புத்தூர் வித்தியாலயம், எஸ். புகாரி, கம்/அல் முகாரத் ம, ம. வி., எம். அழகரத்தினம், பது/குணுகலை தமிழ் வித்தியாலயம்.

எஸ். சின்னத்தம்பி போடி, பொ/முகத்துகல் தமிழ் வித்தியாலயம், செல்வி ஏ. எல். அந்தோனிப்பிள்ளை, பது/சவுக்கம மகா வித்தியாலயம்.

எம். யூ. கருத், இ/தெய்லனே மகா வித்தியாலயம், ஏ. எல். எம். சக்காரியா, கே/தலகஸ்பிட்டி, முஸ்லிம் வித்தியாலயம், எஸ். ஏ. மனகும்மா, நு/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், எம். ரீ. காரியப்பர், மட்/பட்டிருப்பு ம.வி ,ஏ.எல். எம். நாதிப், அ/கொறப்பொலை மு.ம.வி., எம்.எல். எம். ஜபீர், கே/லக்ரா மகா வித்தியாலயம்.

கே. சி. சம்சுதீன், கே/கதிரவலஞ முஸ்லிம் வி., எம். ஐ. எம். முஸாடீன் அமீர், கமு/அல் ஸனியா முஸ்லிம் வி, எம். எச். எம். ரஸத் பது/அல் ஈர்ஸான் கனிட்ட பாடசாலை, எஸ். பொன்னுத்துரை, பது/எலதாகுவா தமிழ் வித்தியாலயம், வதுளை, செல்வி பி. குமாரசுவாமி, மன்/அடம்பன் ம. ம. வி, வேலுப்பிள்ளை தம்பிராசா, பது/மொராகலை தமிழ் வித்தியாலயம், செல்வி பத்மா இரத்தினம், மன்/அடம்பன் உ. க. தமிழ் வி. செல்வி சற்குணநாயகி செல்லையா, பது/சரஸ்வதி கனிட்ட பாடசாலை.

ரீ. மகாதேவன், அ/கெக்கிராவை முஸ்லீம் ம. வி; செல்வி வீ. கனகம்மா, மன்/நாவட்டிக்குளம் உ. க. த. வி; திரு. எஸ். பரமலிங்கம் மன்/அடம்பன் ம. வி; செல்வி ஜே. பசுபதி, க/ஜபார் ம. வி. கலகெதரை; திருவாளர்கள் வி. குமரேஸ்வரதாஸ், மன்/அடம்பன் ம. வி; ரீ.கிருஷ்ணகுமார், கமு/அல் அஸாரல் ம. வி; செல்விகள் சுப்பிரமணியம் மட்/காத்தான்குடி ம. ம. வி; பாலசரஸ்வதி, மன்/அல் அஸ்ராவ் ம. வி. திருமதி பவானி ஆலாலசுந்தரம், யா/பூநகரி ம. வி; திரு. இம்மானுவேல் வாஸ், அ/அலவீவா ம. ம. வி, செல்வி எஸ். சுசிலாதேவி, வ/அவக்குளம் ம. வி, தர்மரத்தின முதலி, கஞ/அல் ஹலன் ம.வி, எஸ். செல்வானந்தன் க/துறையாய, எஸ். ஞானப்பிரகாசம் அ/பலலனுவீவா முஸ்லீம் ம. வி, செல்வி கே. பி. பகவதி இ/நாவல்கந்தை வி,

## படிவங்களை பெறுவதில் சிரமம்

(கோண்டாவில்)

யாழ்ப்பாணத்துக்கு அகதிகளாக வந்தவர்கள் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் விநியோகம் செய்யப்படும் விண்ணப்பபடிவங்களைப் பெறுவதில் பெரும் சிரமம் அடைகின்றனர்.

விண்ணப்பப் படிவங்கள் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் போதியளவு இல்லாமையிஞல் பலதடவைகள் அவர்கள் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கு செல்லவேண்டியுள்ளது.

## யாழ். மாவட்ட சுகாதார ஊழியர் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

மாவட்ட இடமாற்றத்திட்டத்தின் பிரகாரம் யாழ். சுகாதாரத்திணைக்களத்தில் கடமையாற்றும் சிற்றூழியர்கள், மருத்துவமாதர்கள், மருந்துக்கலவையாளர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் (தரம் 2 'அ' பிரிவு) ஆகியோரிடமிருந்து அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெறவுள்ள வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்களை யாழ். சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவலகம் கோரியுள்ளது.

இந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதி அடுத்த மாதம் 19-ம் திகதி என அறிவிக்கப் பட்டுள்ளது. (அ)

## புலோலியும் மண்டைதீவும் பனம்பொருள் ஏற்றுமதி மாதிரிக் கிராமங்கள்

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் பனம் பொருள் உற்பத்தி ஏற்றுமதிகளை மேற்கொள்ளுமுகமாகவும், பனம் பொருள் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்குமுகமாகவும் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் புலோலிக் கிராமமும், மண்டைதீவுக் கிராமமும் ஏற்றுமதி மாதிரிக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் பல கிராமங்களில் பனைவள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையிலேயே இம்மாதிரிக் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இரு ஏற்றுமதி மாதிரிக் கிராமங்களும் ஏற்றுமதி மாதிரிக் கம்பனிகளின் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் இரு ஏற்றுமதி மாதிரிக் கிராமக் கம்பனிகளும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் பனை அபிவிருத்திச்சபையினால் உருவாக்கப்பட உள்ளன.

புலோலி ஏற்றுமதி மாதிரிக் கிராமக் கம்பனி பருத்தித்துறை-புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம், கட்டைவேலி-உடுப்பிட்டித் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பரப்பெல்லையைக் கொண்டு இருக்கும் மந்திகை, அல்வாய், வராத்துப்பளை, அம்பன், பொலிகண்டி, உடுப்பிட்டி, வல்வெட்டி, புலோலி, காணவாய் தெற்கு ஆகிய கிராமங்களில் பனம் பொருள் உற்பத்தியாளர்களைப் பங்கு தாரர்களாகக் கொண்டு இக்கம்பனி இயங்கும்.

மண்டைதீவு ஏற்றுமதி மாதிரிக் கிராமக் கம்பனி தீவுப் பகுதி, வேலணை தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் பரப்பெல்லையைக்கொண்டு இயங்குவதுடன் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை முதலிய கிராமங்களின் பனம்பொருள் உற்பத்தியாளர்களைப் பங்குதாரர்களாகக்கொண்டு இருக்கும்.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் அங்கீகாரத்துடனும், ஒத்துழைப்புடனும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரமான பனம் உற்பத்திப் பொருட்களை இக்கிராமங்களில் உருவாக்குவதில் இவ்வேற்றுமதி மாதிரிக் கிராமக்கம்பனிகள் ஈடுபடும்.

இக் கம்பெனிகளின் எல்லைப் பரப்பிற்குள் உள்ள கிராமங்களில் உற்பத்திசெய்யப்படும் தரமான பனம் பொருட்களை கம்பனி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் என்றும், இதற்கெனக் குறிப்பிட்ட கிராமங்களில் உற்பத்திக் கொள்வனவு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பனை அபிவிருத்திச்சபையில் பொறுப்பு ஏற்று இருக்கும் காமன்வெல்த் நாடுகளின் சிறப்பு ஆலோசகரும், தமிழக பனைத்தொழில் நிபுணருமான திரு. கே. சம்பந்தம் பல கிராமங்களுக்கும் விஜயம் செய்து நேரில் ஆய்வுகளை மேற்கொண்டு இவ்வேற்றுமதி மாதிரிக்கிராமக்கம்பணிகள் அமைக்கப்படுவதற்கான ஏற்றுமதி மாதிரிக்கிராமங்களைத் தெரிவு செய்தார். (அ)

## லட்ச ரூபா வழங்க நடவடிக்கை

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் உள்ள தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள், அகதிகள் நிவாரண நிதிக்குச் சுமார் ஒரு லட்சம் ரூபாவை வழங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்துவருவதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்செயல்களால் பாதிக்கப்பட்டு வடபகுதிக்கு வந்துள்ள அகதிகளுக்குப் பனை அபிவிருத்திச் சபை தனது உற்பத்திப் பொருட்களைத் தாராளமாக விநியோகம் செய்து வருகின்றது. அகதிகளின் படுக்கை வசதிக்காகப் பெரும் அளவில் பாய்களையும் மற்றும் பணம் உணவுப்பொருட்களையும் வழங்கி வருகின்றார்கள். (அ)

## நாகவரதநாராயணர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகவரத நாராயணர் வருடாந்த உற்சவம் கடந்த 22ம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகிறது.

31ம் திகதி கிருஷ்ண ஜயந்தியும், அபிஷேக அன்னதானமும், மாலை உறியடி உற்சவமும் நிகழும். (து)





கிளிநொச்சி அகதிமுகாமில் தங்கி இருக்கும் கேகாலை லைட்மோள் ஜேட்டைச் சேர்ந்த ஆர். சண்முகம் என்பவர் தமது நான்கு பிள்ளைகளையும் கலவரத்தின்போது கைதவறவிட்டு ஏக்கத்துடன் இருக்கிறார். இங்கு படத்தில் காணப்படும் ராஜலட்சுமி (வயது 10), புஷ்பவள்ளி (வயது 19), சுப்பிரமணியம் (வயது 15), இராமநாதன் (வயது 18) ஆகியவர்களே அந் நால்வரும்.

## அகதிகளுக்கு உதவிப் பொருட்கள்

[மாவிட்டபுரம்]

உதவிப் பொருட்கள் வழங்கும் பொருட்டு வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. கிராமசேவை அலுவலர்களும், விசேடசேவை அலுவலர்களும் இந்த வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

அகதிகளது விபரங்கள் சேகரிக்கப்பட்டபின் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் அப்பகுதி ப. நோ. கூ. சங்க கிளை ஒன்றில் வைத்து இந்த உதவிப்பொருட்கள் வழங்கப்பட உள்ளன.

## இன்றைய பலன்

ஆவணி 14ம் திகதி
செவ்வாய்கிழமை
(30—8—83)

மேடம்: ஆடம்பரமான செலவுகளை இன்று தவிர்த்துக் கொள்ளவும் பூமிப்பிணக்கு இன்று பொல்லாங்கைத் தேடித்தரலாம் உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

இடபம்: மனம் நிறைந்த வாழ்வு கிடைக்கும் இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு விவசாயிகள் விவசாயத்துறையில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு.

மிதுனம்: தற்பெருமை தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும் பொருளும் பலவழிகளில் செலவாகும் கொடுக்கல் வாங்கலால் பிணக்குத்தோன்றி இதனால் உறவுமுறைகளில் வெடிப்பு உருவாகும்.

கடகம்: உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர் புதிய வாகனம் கொள்வனவுசெய்ய உகந்ததினம். கடமையில் ஆர்வம் பிறக்கும் துணிச்சலுடன் தொழிலில் ஈடுபடுவீர்.

சிங்கம்: திட்டமிட்டபடி வாழ்க்கை நடக்கும் சிரமமான காரியங்களையும் இலகுவாகச் செய்து முடிப்பீர்கள் தங்கள் திறமை சுடர்விட்டுப் பிரகாசிக்கும் பொன்னான தினம்.

கன்னி: சிந்தனைகளை தாக்கும் சீறிவரும் கோபம் வேதனையைத்தரும் ஆயுதங்களுடன் பழகுபவர்கள் கவனம்வேண்டும் கல்வியில் மந்தநிலைகாணப்படும் நிதானம்வேண்டும்.

துலாம்: குடும்பத்தில் குதூகலம் தோன்றும் களஸ்திரவழியால் நன்மைகளுக்கும் இடம் உண்டுபிரிந்தவர்கள் வாழ்க்கை மீண்டும் இணையும் எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம்.

விருச்சிகம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவார்கள் இயந்திரங்களுடன் பழகாது இருக்கவும்வியாபாரத்தில் மந்தநிலை காணப்படும்.

தனு: பொறியியலாளருக்கு பொன்னான தினம் கலை உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்குபுகழ் பரவும் கற்றதனால் பயன் இன்று கைமேல் கிடைக்கும் நுட்பமான வேலைகளில் ஈடுபடுவதால் முன்னேற்றமுண்டு.

மகரம்: வெற்றி உமது அருகில் விரைந்துவரும் எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள் உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும் டாக்டர்கள் போற்றப்படுவார்கள்.

கும்பம்: பொருளாதாரநிலை சீரடையும் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கு இடமுண்டு பத்திரிகையாளரின் வேதனம் உயர்த்தப்படும் மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள்.

மீனம்: பகைமூட்டம் வட்டமிடும் தொழில் துறையில் முன்னேற்றம் தடைப்படும் நண்பர்களின் செயல்களினால் மனது புண்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த 20 தமிழ்க் குடும்பங்களை பரு. கி. உ. சபை பொறுப்பேற்றது

(புலோலி)

அண்மையில் நிகழ்ந்த வன்செயல்களினால் பாதிப்படைந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ள 20 தமிழ் குடும்பங்களைப் பருத்தித்துறைக் கிராமோதயசபை பொறுப்பேற்று அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

இத்தமிழ் குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதிகளை வழங்குவதற்கென பருத்தித்துறைச் சுங்கத் திணைக்களத்திற்குச் சொந்தமாகவுள்ள பருத்தித்துறை நகரசபைக்குப் பின்புறமாக உள்ள கட்டிடங்கள், முன்பு மீன்பிடிக் கூட்டுத்தாபனம் இயங்கிவந்த பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியிக்கு அருகாமையில் உள்ள கட்டிடம், பருத்தித்துறை கல்லூரி வீதியில் உள்ள பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான கட்டிடம் என்பன பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

இக்குடும்பங்களுக்கு நிரந்தர வசிப்பிடமேற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இவர்களுக்கான தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கைகளைக் கிராமோதயசபை மேற்கொள்ளவுள்ளது.

இக்குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கு முகமாக வடமராட்சிப் பகுதி மக்களிடமிருந்து பணம், உடுபுடவைகள், உணவுப் பொருட்கள் என்பன சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## வடமராட்சி கி. உ. சபைகள் உதவி!

[புலோலி]

வடமராட்சி-வடக்கு-கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சகலகிராமோதய சபைகளுக்கும் அண்மையில் ஏற்பட்ட வன்செயலினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. [க]

யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி
வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சிட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சிட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.
குறெஸ் ட்ரவல் சேவிசஸ்[பிறை]லிமிட்.
05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)
கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!
சகல விமானப் பயணச் சீட்டுகளுக்கும் 5.5%க் கழிவு பெற்றுக்கொள்ளலாம்
CROSS TRAVEL SERVICES (PVT)LTD.
Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair
Stage II Modern Market Ist Floor
BUSSTAND CENTRE ROAD JAFFNA. Phone 22040—22065

# "இலங்கையருக்கு 6 மாத "விசா" வழங்க வேண்டும்!"

## பாரதப்பிரதமருக்கு கோரிக்கை

சென்னை,

இலங்கையிலிருந்து வரும் தமிழர்கள் இந்தியாவில் தங்குவதற்கு ஆறுமாதகால விசா வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை தமிழக சட்ட மேலவை முன்னாள் உறுப்பினர் திரு இராஜனார்த்தனன் தந்திமூலம்கேட்டுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் சமீபத்திய வன்செயல்களினால் கடவுச்சீட்டை இழந்திருப்பதனால் இது விஷயத்தில் திருமதி இந்திரா காந்தி துறைமுக குழுக்களுடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும்அவர் கேட்டுள்ளார். (சூ)

ஹரன் (யாழ்.நகர்)
காலை 10-30, 2-30
சிவாஜி-சரிதா
சாதா-
ராஜீவ் துணை
(கலர்)

ராணி (யாழ் நகர்)
10-30, 2-30 6-15
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

சாந்தி யாழ்.நகர்
காலை 10-30, 2-30
— எம். ஜி. ஆர். —
"எங்க வீட்டு பிள்ளை"
புதிய வண்ணப் பிரதி

லிடோ (யாழ்.நகர்)
10-30, 2-30, 4-45
Sean Connery 007
YOU ONLY LIVE TWICE
(Colour - Scope)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00 6-00
கமலஹாசன்-ஸ்ரீதேவி
கல்யாண ராமன்

ரீகல் கடைசி வாரம்
10-30, 2-00,
GIRL FROM INDIA

ராஜா (யாழ்நகர்)
10-30, 2-00, 6-00
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்
புதியபிரதி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
முடுபனி

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி. 10-30, 2-30, 6-30
சிவாஜி — K.R.விஜயா
தர்மராஜா
(கலர்)

## நூல் அறிமுகம்

நூல்; இலக்கிய வினாவிடை க. பொ. த. (சா. த.) தமிழ்மொழி [''அ'' பாடத்திட்டம்]

ஆசிரியர்: வாணி சொக்கலிங்கம்.

மீள் பார்வை: க. சொக்கலிங்கம் எம். ஏ.

வெளியீடு: ஜனனி பிரசுரம்

விற்பனை உரிமை: ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 5-50

இன்று கல்வியின் முதல் நோக்கமும் முடிவு நோக்கமும் தேர்வு தான் என்ற நிலை எங்கும் ஆதிக்கம் செலுத்துகிறது. ''எப்படியாவது'' தேர்வில் சித்தியடைய வேண்டும் என்ற வெறி எங்கும் மேலோங்கி நிற்கிறது.

இந்தப் பரபரப்புக்களுக்கிடையேயும் மருந்துக்கு மேல் இனிப்பு உறையிட்டுக் கொடுப்பது போலச்சிலர் மாணவருக்கு அறிவூட்ட முயன்றுவருகின்றனர். இந்த வகையில் க. பொ. த. [சா.த] மாணவருக்கான ''இலக்கிய வினாவிடை'' வெளியாகியுள்ளது. வாணி சொக்கலிங்கம் அவர்களின் இந்நூல் ஆற்றல் வாய்ந்த ஆசிரியரும் நூலாசிரியரும் விரிவுரையாளருமான சொக்கனின் மீள் பார்வையில் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந் நூல் கம்பராமாயணம் (சுந்தரகாண்டம் - காட்சிப்படலம்) பாரதச் சுருக்கம், நாட்டார் பாடல்கள் ஆகிய நூல்களுக்கான வினாவிடைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கம்பராமாயணம் நாட்டார் பாடல்களிலிருந்து நயம்மிக்க பாடல்களைத் தந்து அவற்றினைப் படித்துச் சுவைப்பதற்கான வழிகாட்டலை இந்நூல் வழங்குகிறது. இப் பயிற்சி மாணவர் தாமாகவே சிறந்த பாடல்களைத் தேடிப்பயின்று நயக்க உதவும்.

காட்சிப்படலத்தின் முக்கிய பாடல்கள் எழுந்த சந்தர்ப்பங்களைக் கூறி விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாடல்களுக்கு நயம் எழுதும்போது எவ்வெவ் வழிகள் ஆராயப்படவேண்டும் என்பதை விளக்கும் வகையில் அமைந்த அமைப்புக்கட்டுரை விளக்கஞம் இடம்பெற்றுள்ளன. பாடல்களில் பாத்திரங்களின் உணர்வு புலப்படும்வகையும் எடுத்தாளப்பட்டுள்து. பாடலைப்படிக்கும்போது தோன்றும் உணர்வுகளை எழுத்தில் வடிக்கும் முறையும் விளக்கப்பட்டுள்ளது.

பாரதச்சுருக்கத்தில் வரும் பகுதிகளுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குதல், கதாபாத்திரங்களின் குணவியல்புகளை வருணித்தல் ஆகியன எடுத்தாழப்பட்டுள்ளன.

நாட்டார் பாடல்கள் இயல்பாகவும் எளிமையாகவும் அமைந்தவை எனினும் அவற்றைப்படித்துச் சுவைத்து அநுபவங்களை வெளிப்படுத்தும் நிலையில் இன்றை மாணவர்கள் இல்லை என்பது பொது அபிப்பிராயம். எனவே நாட்டார் பாடலின் பல்வேறு பண்புகளையும் உதாரணங்களோடு கட்டுரை வடிவில் ஆசிரியர் எடுத்தாண்டுள்ளமை போற்றத்தக்கது.

தேர்வு என்ற ஓட்டத்தில் தோற்றும் மாணவருக்கு இந்நூல் 'குளுக்கோசாகப்' பயன்படும் என்பது உறுதி.

'ஆடலிறை'

## உயர் கல்விபெற அமெரிக்கா சென்றார்



யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவரும், பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியலாளருமான திரு. பரஞ்சோதி ஜெயகுமார் அரசாங்கப் புலமைப் பரிசில்பெற்று மேற்படிப்புக்காகக் கலிபோர்னியா சென்றுள்ளார்.

இவர் பொறியியலாளர் இறுதிப் பரீட்சையில் முதலாம் பிரிவில் ஒனர்ஸ் சித்தியுடன், டாக்டர் ஹேவாவித்தாரன ஞாபகார்த்தப் பரிசையும், புலமைப் பரிசிலையும் தட்டிக்கொண்டவராவார். அனலைதீவைச் சேர்ந்த இவர், இளைப்பாறிய தபாலதிபர் திரு. சின்னப்பா பரஞ்சோதி, திருமதி விஜயலட்சுமி பரஞ்சோதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார். (அ)

## இத் தபாலகத்தை மீண்டும் திறக்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தபால் நிலையத்தை மீண்டும் திறந்து இயங்கச்செய்வதன்மூலம் மானிப்பாய்க் கோவில்பற்று மக்களின் கஸ்டங்களைப் போக்குமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மானிப்பாய்க் கிராமோதய சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சபைத் தலைவர் சட்டத்தரணி சி. இராசேந்திரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இத்தீர்மானத்தின்பிரதிகளை கொழும்பிலுள்ள தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சருக்கும், பிரதம தபால் அதிபருக்கும் அனுப்பிவைப்பதென்றுதீர்மானிக்கப்பட்டது.

## தாயிடமிருந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தைச் சேர்ந்த போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி சார்ஜன்ட் பொன். இரமானந்தம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

குழந்தையின் மரணம் தொடர்பாக தாயார் புஷ்பராணி சாட்சியமளிக்கையில்;

சம்பவதினம் இரவு கணவனுக்கும் தமக்குமிடையே ஏற்பட்ட சச்சரவு காரணமாகத் தமது ஒன்றரை வயதுக் குழந்தையையும் கொண்டு, வீட்டுக்கு மேற்குப் பக்கமாக உள்ள சுன்னாகம் ப. நோ. கூ. ச. கிளைக்கு முன்னால் நின்றதாகவும், தம்மைப் பின் தொடர்ந்து வந்த கணவர் குழந்தையைப் பறித்துக்கொண்டு வீடுநோக்கிச் சென்றபொழுது சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்த லொறியொன்று மோதிவிட்டுச் சென்றதாகவும், தாம் சென்று பார்த்தபொழுது தமது குழந்தை சின்னாபின்னமாகச் சிதறுண்டு கிடந்ததையும், கணவர் படுகாயமடைந்த நிலையில் கிடந்ததையும் தாம் கண்டதாகவும் தெரிவித்தார்.

இச்சம்பவம் நடைபெற்ற பொழுது நேரம் இரவு 9 மணியளவில் இருக்குமென்றும், அவ்விடத்தில் நின்ற சிலர் லொறியை நோக்கி ஓடிய பொழுதிலும் லொறி தப்பி ஓடிவிட்டதாகவும் அவர் சொன்னார்.

லொறியையும் சாரதியையும் கைதுசெய்யுமாறு உத்தரவிட்ட சுன்னாகம் மரண விசாரணை அதிகாரி திரு. ச. மருதலிங்கம் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட லொறியைத் தேடி சுன்னாகம் பொலிசார் வலை விரித்துள்ளனர். (மா)

## "இலங்கையில் பிரிவினையை அரசு தடைசெய்துள்ளது"

வெலிங்டன், ஆக. 29

''ஐக்கிய இலங்கை என்ற கொள்கையின் அடிப்படையிலேயே இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்க்க இலங்கை அரசாங்கம் முன்வரும்'' என்று இலங்கை பிரதி வெளிநாட்டமைச்சர் திரு டிரோன் பொனாண்டோ நியூஸிலாந்தில் தெரிவித்தார். திரு பெர்னாண்டோ நியூஸிலாந்து அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''இலங்கையில் பிரிவினையை அரசாங்கம் தடைசெய்துள்ளது. பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்களும், சிறுபான்மை இனத்தவரான தமிழர்களும் நீண்டகாலமாக ஒற்றுமையாகவேஇலங்கையில் வாழ்ந்துவருகின்றனர்.

இலங்கைத் தமிழர்களுக்குள்ள பிரச்னைகளைத் தீர்க்க இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ளது. அவர்கள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு ஐக்கிய இலங்கை என்ற கொள்கையின் அடிப்படையில் முன்வந்தால்மட்டுமேஇலங்கை அரசு அவர்களுடன் பேச்சு நடத்தும்'' என்றார். (கி)

## செயற்கைப் பாலுணவு விளம்பரங்களை தடை செய்ய வேண்டுகோள்!

புதுடில்லி, ஆக. 29

செயற்கை பாலுணவு வகைகளின் விளம்பரங்களைத் தடைசெய்யும்படி இந்திய சுகாதார ஸ்டேட் மந்திரி திருமதி மொஷினா கிட்வை கேட்டுள்ளார்.

செயற்கை பாலுணவுவகைகளின் பாவனை அதிகரித்து வருவதால் சிறு, குழந்தைகளின் ஆரோக்கியம் பாதிப்படைந்துவருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 'தாய்ப்பால்' ஊட்டப்படுவதன்மூலமே குழந்தைகளின் தேகாரோக்கியம் விருத்தியடையுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குழந்தைகள் செயற்கைப் பாலுணவு வகைகளை உட்கொள்வதால் பல சிக்கல்கள் மிகுந்த வருத்தங்கள் அவர்களைப் பீடிக்கின்றன என்றும், எனவே செயற்கைப் பாலுணவைத் தடைசெய்து தாய்ப்பாலை அவர்கள் பெறும் வகையில் செயற்கைப் பாலுணவு விளம்பரங்கள் தடைசெய்யப்படவேண்டுமென்று அவர் கூறியுள்ளார்.

தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை விளக்க மாநிலஅரசுகளை சிறந்தபிரசாரங்கள் மேற்கொள்ளும்படியும் அவர் கேட்டுக் கொண்டார். (கி)

## சுகாதார ஊழியர்களுக்கு முற்பணச் சம்பளம்

(பண்டத்தரிப்பு)

கலவரங்களினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு மூன்றுமாத சம்பள முற்பணம் யாழ். சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவலகத்தினரால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. முற்பணம்யாவும் வழங்கப்பட்ட பின்பே பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஆகஸ்ட் மாதத்திற்கான சம்பளம் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சூ)

## கிளிநொச்சி குருகுலத்திலும் அகதிகள் முகாம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இயங்கிவரும் ஆறு அகதிகள் முகாம்களிலும் 1480 அகதிகளுள்ளார்கள்.

கடைசி அகதிகள்முகாம் கிளிநொச்சி குருகுலத்தில் திறக்கப்பட்டுள்ளது இம்முகாமிற்கு குருகுல அதிபர் திரு வே. கதிரவேலு பொறுப்பாகவுள்ளார்.

இம்முகாமுக்கு வேண்டிய உதவிகளை பல சமூக ஸ்தாபனங்கள் வழங்கிவருகின்றன. (வெ)

## பல்கலைக்கழக தமிழ் மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் தமது எதிர்காலநிலை குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் கூடுகின்றனர்.

## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

சில்லாலைப் பங்குத் தந்தை அருட்திரு ஏச். ஜெபநேசன் அடிகளார் அடுத்த மாதம் தொடக்கம் யாழ்ப்பாணம் புனித. மரியாள் பேராலயத்தின் பங்குத் தந்தையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சுமார் நான்கு ஆண்டுகளாக சில்லாலைப் பகுதியில் சிறப்பான முறையில் சேவையாற்றிய இவருக்குச் சில்லாலை தெற்கு புனித. யாகப்பர் ஆலயத்தினுடைய பங்கைச் சேர்ந்த மக்கள் சார்பில் எதிர்வரும் சனிக்கிழமை பிரிவு உபசார வைபவம் நடாத்தப்படவுள்ளது.

## ஒருநாள் சம்பளத்தை வழங்க முடிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி அகதிகள் புனர் வாழ்வுத் திட்டநிதிக்கு சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை ஊழியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்க முடிவு செய்துள்ளதாக வைத்தியசாலை ஊழியர் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

## இலவச மூக்குக்கண்ணாடி

[சாவகச்சேரி]

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கைதடி அகதிகள் முகாமில் கண்பார்வை பரிசோதனையும் பார்வை குறைந்தவர்களுக்கு 25 இலவச மூக்குக் கண்ணாடிகளையும் அன்பளிப்புச் செய்தனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலாளர் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தன் இதற்கான ஏற்பாடுகளை மேற்க்கொண்டிருந்தார். (க)

## மணிவாக்கு

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினையாவையுமே

—கந்தர் அநுபூதி

# நமது நோக்கு

## பாடசாலைப் பிரச்னைகளும் பொறுப்புக்களும்

“அரேபியாவின் வாசனைத் திரவியங்கள் அனைத்தும் இந்த ரத்தம் சிந்திய கைக்கு நறுமணம் ஊட்டமாட்டா” என்ற ஷேக்ஸ்பியரின் வாசகம் அடிக்கடி நினைவுக்கு வருகின்றது.

அரச விருந்தினரைத் தன் வீட்டிலேயே கொலைசெய்த சீமாட்டி மக்பெத் (Lady Macbeth) பிரமகத்தி பிடித்த நிலையில், தமக்குச் சிகிச்சையளிக்க வந்த வைத்தியருக்கு இவ்வாறு கூறியதாக ஷேக்ஸ்பியரின் சோக நாடகம் ‘மக்பெத்’ கற்பிக்கின்றது.

எங்கள் பாடசாலைகள் எப்போது எந்தச் சூழ்நிலையில் இரண்டாம் தவணைக்கு மூடப்பட்டதென்பதுஇன்று நினைவில் இல்லை.

எப்போது திரும்பவும் திறபடுமென்பதும் நீண்டகாலம் நிச்சயமாகவிருக்கவில்லை.

நாட்டின் பெரும்பான்மையானவை இவ்வாரம் திறபடுமென்றபோது எமது சிந்தனை ஷேக்ஸ்பியர் நாடகத்தில்கூறப்பட்ட கருத்தையே நாடிற்று.

நெடுங்காலமாக குழப்பநிலையில் இப்பகுதி மாணவரின் கல்வி கீழ்நோக்கிச் செல்வதை நாம் காணமுடிந்தது; தனியார் ‘டியூற்றறிகளை’ நம்பி வாழும் பெற்றோர் இன்று அனேகம்; அவர்கள் போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் கண்ணும் கருத்தும் உடையவர்கள்.

பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வு, ஒழுக்கம் என்ற உயரிய பண்புகள் இளம் வயதிலேயே பாடசாலைகளிலேயே, ஆசிரிய-மாணவ தொடர்பால், ஆசிரியரின் ஆளுமையால், உருவாக்கப்படவேண்டுமென்ற கொள்கை குன்றிவிட்டது.

விஞ்ஞான பாடங்கள், அவற்றின் உயர்ச்சியால் பல்கலைக்கழகங்களில் உள்ளிட்டு படிப்பை முடித்து பெரும் தொழில் வாய்ப்புப் பெற்றுவிட வேண்டுமென்ற பேராசை பாடசாலைக்கல்வி முறையை மட்டந்தட்டிவிட்டது.

அது மட்டுமல்ல மாணவருக்கிடையே விரும்பத்தகாதபோட்டி, பொறாமை, பாடசாலைகளுக்கிடையே இன அடிப்படையிலும், பெரும்போட்டி நாட்டின் இன்றைய மிகக்கேவலமான நிலைக்கு பெருங்காரணம்.

இந்த அபாயமான சூழ்நிலையில், நாம் தொடக்கத்திலே குறிப்பிட்டதுபோல் பெரும் மனக்கவலையில் ஆழ்ந்திருக்கும் நாம் இவ்வருடத்துக்குரியபடிப்பனைத்தையும் இத்தவணையில் முடிவுகட்ட முழு ஒத்துழைப்பையும் வழங்க முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் சுமார் 50,000 அகதிகள் இங்குவந்தடையும்நிலை பூர்த்தியானதும், மாணவர்களை இங்குள்ள பள்ளிக்கூடங்களில் சேர்க்கும் வசதிகள் ஏற்படுத்தவேண்டும்; இவ்விடயத்தில் கல்வித்திணைக்களம் பாடசாலை அதிபர்கள், பெற்றோர் அனைவரும் பலவிதவாதங்களையும், பிடிவாதங்களையும் ஒழித்து பெருந்தன்மையுடன் இந்தப் பெரும்பொறுப்பைச் சமாளித்து ஒப்பேற்ற வேண்டும்.

வெளியிலிருந்துவரும் மாணவர்களுக்கு விசேடகவனம் செலுத்துவதோடு, எவ்வித பகைமைக்கும், பகைமையை நினைவூட்டும் செய்திகளுக்கும்எள்ளளவும் இடமளிக்கலாகாது. வெளியிலிருந்துவரும் ஆசிரியர் இவ்விடயத்தில் மிக விழிப்பாக இருத்தல் அவசியம்.

நீண்டகாலம் குழப்பநிலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாணவர்கள், இம்மூன்று மாதங்களிலும் தங்கள் முழுக் கவனத்தையும் படிப்பில் செலுத்தமுடியுமானால், இழந்த காலத்தை மீட்பதோடு, சூழ்நிலைசுற்றுடலிலும் ஒரு அமைதி ஏற்படுத்தமுடியும்.

தவறான பாடங்களைப் படித்து, தவறான மயக்கமான கருத்துக்களால் தாக்குண்ட கல்லூரி இளைஞர்கள் தங்கள் சகாக்களின் வீடு வாசல்களைத் தாக்க நேரிட்ட துன்பக்கதை நாட்டின் வருங்காலத்தைக் கேள்விக்குறியில் நிறுத்தி இருக்கின்றது.

யாழ். பிரதேசக் கல்வி சீரடைய எல்லோரும், குறிப்பாக இளைஞர்கள் அமைதிக்குதவ வேண்டும்.

## நல்லையின் ஞானக் கனி

நல்லையிலே ஒரு ஞானக் கனி — இதை
நாடி வருவோர்க்கு இல்லைப் பிணி
எல்லையே இல்லாத இன்பக் கனி — இதை
ஏற்றித் துதிபாட ஏது பிணி?
தொல்லையே அறுத்தருளும் தூய கனி — இது
தோகை மயில்மீது ஏறுங் கனி
இல்லை யென்னுதருளும் இன்பக் கனி — இதை
என்றும் துதிப்போர்க்கு ஏது தனி?

(செல்வி தேன்மொழி அருளம்பலம்)

# மக்கள் கருத்து

## நுளம்புத் தொல்லை

கச்சேரி- நல்லூர் வீதியில் யாழ்ப்பாண வை. எம், சி. ஏ. க்கு அருகாமையில் வசிப்பவர்கள் இரவில் படிப்பதற்கு அல்லது வாசிப்பதற்கு நுளம்புவர்த்தி கொளுத்த வேண்டிய நிலை, நித்திரை செய்வதற்கு மின்விசிறி பாவிக்க வேண்டும். காரணம் கோடிக்கணக்காக படையெடுக்கும் நுளம்புகள்.

இவை புகையிரத கடவையில் முடிவடையும் அடைக்கப்பட்ட, துர்நாற்றம் வீசும் அழுக்கு நீரோடையில் பெருகுகின்றன. இருந்தும் தொடர்ந்தும் அழுக்கு நீர் இக்கானினுள் பாய்ச்சப்படுகின்றது.

இக் கானைச் சூழ இருக்கும் குடியிருப்பாளர் கடந்த பல வருடங்களாக இப் பிரச்சினையை தீர்ப்பதற்காக யாழ்ப்பாண மாநகரசபை, அரசாங்க அதிபர், உள்ளூராட்சி மன்றம் ஆகியவற்றைஅணுகியபோதும் ஒன்றும் பயன் தரவில்லை. இறுதியாக இவர்கள் நீதிமன்றத்தை அணுகினர். யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி 18-3-1983 அன்று இவ்விடத்தைவந்து பார்வையிட்டு பிறப்பித்த ஆணைக்குப் பிறகும் அதேநிலை தொடர்கின்றது.

மாநகரசபை உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன?

யாழ். வாசி.

## தனியார்துறை ஊழியர்

தங்களுடைய 26-8-83ம் திகதிய பத்திரிகையின் மக்கள் கருத்துப் பகுதியில் திரு. க. பி. கண்ணபிரான் எழுதிய கடிதத்தை பார்வையிட்டோம் இவ்விடயம் சம்பந்தமாக எமது சபை யாழ். அரசாங்க அதிபருக்கு 10-8-83ம் திகதிய கடிதமூலம் தனியார்துறை ஊழியர்களின் நிலைமை பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். திரு. கண்ணபிரானின் கடிதத்தின் பிரகாரம் தனியார்துறை ஊழியர்கள் பற்றி எதுவித நிவாரண நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பது அவருடைய கடிதத்திலிருந்து தெளிவாகிறது.

ஆகையால் இவ்விடயத்தில் அரசாங்க அதிபரும், அரசு உத்தியோகத்தரும், தனியார்துறை ஊழியர்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுத்து திரு. கண்ணபிரான் போன்ற தனியார்துறை ஊழியர்களின் துயர்துடைத்து அவர்களுக்கும் தகுந்த உதவிகளைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
சி. க. திருச்சிற்றம்பலம்,
தலைவர்,
மயிலணி நலன்புரி
கண்காணிப்புச் சபை.

## நெடுந்தீவு வந்துள்ளன

(நெடுந்தீவு)

சமீபத்தில் நிகழ்ந்த வன்செயல் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட சுமார் 98 குடும்பங்கள் அகதிகளாக இதுவரை நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்30-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

## “பாக். உள்விவகாரங்களில் பாரதம் தலையிடுகிறது!”

### பாக். வெளிநாட்டமைச்சு குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத் ஆகஸ்ட். 29 பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாகப் பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சு குற்றம் சாட்டியுள்ளது.

இந்த விவகாரம் குறித்துப் பாகிஸ்தானிய வெளிநாட்டமைச்சு இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத்தூதரை அழைத்துத் தனது கவலையைத் தெரிவித்ததோடு இவ்வாறான தலையீடு இருநாடுகளிடையேயும் காணப்படும் ஒற்றுமை நல்லெண்ணத்தைப் பாதிப்படையச் செய்யுமெனவும் தெரிவித்துக்கொண்டது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது கட்சியின் அமைச்சரவைக் கூட்டத்தில் பாகிஸ்தான் விவகாரம் பற்றிக் கருத்துத் தெரிவித்திருந்தார். பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடவில்லையென்றும், ஆனாலும்உலகத்தில் எங்காவது மனித உரிமைகள் மீறப்படும்பொழுது அதனை இந்தியா பாராமுகமாக நோக்கவும் முடியாது என்றும் பிரதமர் இந்திராகாந்தி தெரிவித்திருந்தார்,

இந்தியவெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவும் பாராளுமன்றத்தில் பாகிஸ்தான் விவகாரங்கள்பற்றி குறிப்பிட்டிருந்தார்.

பாகிஸ்தானிய வெளிநாட்டமைச்சு அதிகாரி ஒருவர்; இந்தியாவின் இக்கருத்து வரவேற்கக்கூடிய ஒன்றல்லவென்றும், மாறாக ஆத்திரமூட்டக்கூடியதொரு நடவடிக்கையென்றும் தெரிவித்துள்ளார். (சூ)

## பாதிக்கப்பட்ட மாணவர்க்கு சொந்தஇடங்களில்கல்விவசதி

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு தமது சொந்த ஊர்களுக்குச் சென்ற மாணவர்கள் தமக்கு அருகாமையில் உள்ள பாடசாலையில் சேர்ந்து கொள்ளலாம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாறு அண்மையிலுள்ள பாடசாலையில் சேர முடியாத மாணவர்கள் அப்பிராந்தியக் கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டால் அவர் இப்பாடசாலைகளில் சேர்ந்து கொள்ள வசதி செய்துகொடுப்பார்.

இதேவேளை பாடசாலைகள் 3-ம் தவணைக்காக நேற்றுத் தொடங்கியுள்ளன. மூன்றாம் தவணை டிசம்பர் மாதம் 6-ம் திகதி முடிவடையுமெனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. பாடசாலைப் பிள்ளைகளுக்கான பஸ் சேவையும் நேற்றுத் தொடங்கியுள்ளது. (சூ)

## “தமிழர் பாரம் பரியங்களை மாணவர் மறக்கக்கூடாது!”

### – புவியியல்துறை விரிவுரையாளர்

(வேலணை)

இக்காலமாணவர்கள், தமிழர் பண்பாடுகளிலும், கலாச்சாரங்களிலும் இருந்த ஒழுக்கம், பண்பு, ஆத்மீக ஞானம் என்பவற்றை மறந்து வாழ்வதோ, அவற்றிலிருந்து வழுவி நடப்பதோ மிகவும் மனவருத்தப்படவேண்டியதும் அருவருக்கப்பட வேண்டியதும்மாகின்றது. தமிழர் கலாச்சாரத்தையும். பெருமைகளையும்பேசுகின்ற நாம் இவற்றைச் சிந்திக்கவேண்டியது மிகமிக அவசியமாகின்றது.

இவ்வாறு வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தினரின் பகல் போசன விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியல்துறை விரிவுரையாளர் திரு.எஸ். பாலச்சந்திரன் தெரிவித்தார்.

செல்வன் நா. வரதராசன் தலைமையில் நடந்த இவ்விருந்துபசாரத்தில் மகாவித்தியாலய அதிபர் ஆசிரியர்கள் உயர் வகுப்பு மாணவ மாணவிகள் யாழ். மாவட்டத்தில் உள்ள பலமுன்னணி பாடசாலைகளின் உயர்வகுப்பு மாணவிகள் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

திரு. எஸ். பாலச்சந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில் பாடசாலைகளின் கட்டிடங்கள், பெயர்கள்மாற்றமடையலாம், வரலாறுகள் காலங்களால் மாற்றம் அடையலாம், தேய்வடையலாம். ஆனால் அறிவு என்றும் குன்றாது அது மாறாத ஒன்றாகும். அது மேலும் மேலும் வளர்ந்து செல்வது. அதில் குறைவு ஏற்படநாம் அனுமதிக்கமுடியாது.

“தாரமும் குருவும் தலைவிதிப்படி” என்று பழமொழி உண்டு குருவைமதிக்கும் நிலையில் இன்று மாற்றத்தைக் காணமுடிகின்றது. பண்பற்ற நிலைகளிலிருந்து முக்கியமாக தமிழ் மாணவர்கள் மாறவேண்டும். குருவுக்குள்ள தன்மையும், பண்பும் எமது முன்னோர் காட்டிய வழியில் இருக்கவேண்டும்.

## வீதிதிருத்த நடவடிக்கை

(புலோலி)

புலோலிதெற்கு புற்றளைவீதி சுமார் 90,000 ரூபா செலவில் திருத்திப்புனரமைப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வீதியைத் திருத்திப் புனரமைப்புச் செய்வதற்கான நிதியைப் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்திருந்தார்.

(க)

## தசாக அறிவித்தல்

சென்ற (22-8-83) திங்கட்கிழமை காலஞ்சென்ற எனது தர்ம பத்தினியாகிய இராஜேஸ்வரி அம்மா அவர்களின் தசாகக் கிரியை முதலியவை நாளை (31-8-83) புதன் கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தனிப்பட்ட அறிவித்தல் தரமுடியாமைக்கு வருந்துகிறோம்.

புத்தூர்.
29-8-83
(8440)

இங்ஙனம்
பிரமஸ்ரீ ச. நாராயணசர்மாவும்
குடும்பத்தினரும்